# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன். நாள்: 07.12.2007**

---

கடந்த சில குத்பாக்களில் திருக்குர்ஆனில் அல்லாஹ் தனது அஸீஸ் என்ற பண்பு குறித்து பல்வேறு வசனங்களில் கூறியுள்ளதை விளக்கினேன். அஸீஸ் என்ற பண்பு குறித்து விளக்கும்போதே அஸீஸ் என்ற பண்பை குர்ஆனில் எங்கெல்லாம் அல்லாஹ் கூறியுள்ளானோ அவற்றில் ஏறத்தாழ பாதி இடங்களில் ஹகீம் என்ற பண்போடு சேர்த்துக் கூறியுள்ளான் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இன்று நான் ஹகீம் என்ற பண்பு குறித்து விளக்குவேன். அஸீஸ் என்ற பண்பை விளக்கும்போதே ஹகீம் என்ற பண்பு குறித்தும் சிறிது விளக்கப்பட்டு விட்டது. ஆனால், இந்த ஹகீம் என்ற சொல்லின் அகராதிப் பொருள் மற்றும் அப்பொருள்களுக்கு அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பு அதாவது, ஹகீம் என்ற சொல் இறைவனுக்காக பயன்படும்போது அதன் உண்மையான பொருள் என்ன? இவை பற்றியெல்லாம் விளக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றைப் பற்றியெல்லாம் இன்று நான் திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களின் சான்றுகளுடன் விளக்குவேன். சியானுல் அரபியில் எழுதப்பட்டுள்ளது. அல் ஹக்கீம் என்று கூறப்பட்டால் அதற்கு நுண்ணறிவுள்ளவர் என்று பொருள்.

அல் ஹிக்மத் என்றால் மிக உயரிய அறிவின் மூலமாக மிக உயரிய பொருட்களைப் பற்றி தெரிவிக்கப்படுதல். அடுத்து, பல்வேறு விஷயங்களின் இரகசியங்களை கவனத்திற் கொண்டு ஒரு பணியை மிக உயரிய முறையில் செய்வதற்கும் ஹிக்மத் என்று பெயர். மிகச் சிறந்த பொருட்கள் என்பது உதாரணமாக பிறப்பின் அடிப்படையில், சிறப்புத் தன்மையின் அடிப்படையில், உருவாக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் அந்தஸ்தின் அடிப்படையில், அறிவின் அடிப்படையில் சுருக்கமாக எல்லா மேன்மைகளின் அடிப்படையிலும் சிறப்பான பொருட்களை தமது முழுமையான அறிவால் சூழ்ந்தறிதலுக்குப் பெயர்தான் ஹிக்மத் ஆகும். அவற்றின் அடி ஆழம் வரை உள்ள அனைத்து அறிவுகளையும் பெற்றிருத்தல். அல் ஹக்கீம் என்பதற்கு ஆலிம் (அறிஞன்), ஹிக்மத் உள்ளவன் என்றும் பொருள்படும்.

ஹதீஸில் திருக்குர்ஆனின் இந்தப் பண்பு குறித்து இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது:

***வஹுவ ஸிக்ருல் ஹகீம்*** (இந்த குர்ஆன் உங்களுக்கு தீர்ப்பு வழங்கப் பயன்படக்கூடியதும், உங்கள் மீது தீர்ப்பு வழங்கக்கூடியதும் ஆகும்.) அதாவது, இது எத்துணை அழகிய வேதம் எனில், இதில் எந்த முரண்பாடுகளும் இல்லை. தெளிவான கட்டளைகளை இது உள்ளடக்கி உள்ளது. இதில் எந்த குழப்பமும் இல்லை. எந்த முரண்பாடுகளும் இல்லை. இதிலுள்ள கட்டளைகளை மனிதன் பயன்படுத்துவதில் எந்த நஷ்டமும் ஏற்பட்டு விடும் என்ற கவலைக்குரிய அம்சம் எதுவும் இதில் இல்லை. ஆனால், இதனைப் புரிந்து கொள்வதற்கு இறையச்சம் (தக்வா) நிபந்தனையாகும். தூய உள்ளம் பெற்றிருத்தல் நிபந்தனையாகும். இந்த தீர்ப்பு வழங்கும் வேதம் ஹகீம் ஆகிய இறைவனிடமிருந்து இறங்கியுள்ளது. ஒருவர் தமது தகுதிக்கேற்ப ஹகீம் (நுண்ணறிவுள்ளவர்) ஆக இருப்பதும் இவ்வேதத்தை புரிந்து கொள்வதற்கு அவசியமான ஒன்றாகும். அப்போதுதான் இது புரிய வரும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திருக்குர்ஆனைப் புரிவதற்கு - அதனை எவ்வாறு புரிய முடியும் என்று விளக்கியவாறு கூறினார்கள்: வெளிப்படையான அறிவுகள் மற்றும் திருக்குர்ஆனின் அறிவுகள் இரண்டிற்குமிடையில் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. உலகின் அறிவைப் பெறுவதற்கு இறையச்சம் ஒரு நிபந்தனை அல்ல. தத்துவம், மருத்துவம், தொழில் படிப்பதற்கு அவர் தொழுகை, நோன்பு பேணுபவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையெல்லாம் இல்லை. இறைவனது ஏவல் விலக்கல்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. தனது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அல்லாஹ்வுடைய கட்டளைகளின் கீழ் வைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இல்லை. மாறாக, பல நேரங்களில் பொதுவாக நமக்குத் தெரியவருவது என்னவென்றால், உலகின் ஏதாவது ஒரு துறையின் வல்லுனராக இருப்பவர் நாத்திகராகி எல்லா கட்டுப்படாமையிலும் பாவத்திலும் மூழ்கியிருப்பவராக காணப்படுகிறார். இன்று உலகிலிருந்து நமக்குக் கிடைக்கும் வலுவான அனுபவம் என்னவென்றால் பெரும்

பெரும் முன்னேற்றங்களைப் பெற்றுள்ள ஐரோப்பா, அமெரிக்காவைச் சார்ந்தவர்கள் புதுப்புது கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களது ஆன்மீக, நல்லொழுக்க நிலைகள் மிகவும் வெட்கத்தக்கவையாக உள்ளன. இலண்டனின் பூங்காக்கள், பாரிஸின் ஹோட்டல்கள் இவற்றைப் பற்றியெல்லாம் எழுதப்படுகின்றனவே அவற்றை நம்மால் சொல்லிக் காட்டவும் முடியாது. ஆனால், விண்ணின் அறிவுகள், திருக்குர்ஆனின் ஞானங்கள் இவற்றை அறிந்து கொள்வதற்கு தக்வா முதல் நிபந்தனையாகும். கழிவிரக்கம் கொள்ளுதல் அவசியமாகும். பணிவு, உருக்கத்துடன் அல்லாஹ்வின் பெயரை உச்சரிக்காமல் அவனது கம்பீரம் கண்டு மெய்சிலிர்த்து அவனிடம் திரும்பாமல் திருக்குர்ஆனின் அறிவின் வாசல் திறக்காது. ஆன்மாவின் பராமரிப்பிற்குத் தேவையானவை திருக்குர்ஆனிலிருந்து அவருக்கு கிடைக்காது. அவ்வறிவின் மூலம் மனிதனுக்கு ஆறுதலும் தூய்மையும் கிடைக்கிறது. திருக்குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும். அதனது அறிவுகள் இறைவனது கையில் இருக்கின்றன. தக்வா அதற்கு ஓர் ஏணியாக இருக்கிறது. அதாவது, மேலே செல்பவர்களுககு ஒரு ஏணியைப் போன்றது தக்வா ஆகும். திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கு தக்வா மிகவும் அவசியமான ஒன்றாகும்.

பிறகு நம்பிக்கையற்றவர், விஷமி, தீயவர், தீய ஆன்மாவைக் கொண்டவர், தற்காலிக இன்பங்களில் இலயித்துக் கிடப்பவர்கள் ஆகியவர்கள் திருக்குர்ஆனின் அறிவை எவ்வாறு பெற முடியும்?

ஒருவர் முஸ்லிம் என்று கூறிக்கொண்டு அரபு இலக்கணங்களை தெரிந்து கொண்டிருந்தாலும், திருக்குர்ஆனின் பொருளை தெரிந்து வைத்திருப்பவராகவும் பெரிய ஆலிம் ஃபாஸிலாக இருந்தாலும் உலகின் பார்வையில் பெரிய ஷேக் ஆக இருந்தாலும் அவர் உள்ளத்தை தூய்மைப்படுத்தவில்லையென்றால் திருக்குர்ஆனின் ஞானத்திலிருந்து அவருக்கு எந்தப் பங்கும் தரப்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

நான் பார்க்கிறேன். இப்போது உலகின் கவனம் முழுவதும் உலகியல் கல்வியின் பக்கம் குனிந்துள்ளது. மேற்கத்திய ஒளி தனது புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தயாரிப்புகள் மூலம் உலகை வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் கூட துரதிஷ்வசமாக தமது வெற்றியின் இரகசியம் அதுதான் என்றும் மேற்கத்திய நாடுகளை தமது வழிகாட்டியாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கருதுகின்றனர். ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களை அப்படியே பின்பற்றுவதில் பெருமை கொள்கின்றனர். இது எவர்கள் தம்மை திருக்குர்ஆனின் நாகரிகத்தை மேற்கொண்டவர்கள் என்று கூறுகின்றார்களோ அந்த முஸ்லிம்களின் நிலையாகும். அவர்களின் முழு வாழ்க்கையின் சுருக்கம் மற்றும் இலட்சியம் எல்லாம் அரபு இலக்கணத்தை வைத்துக் கொண்டு சண்டையிடுவதுதான். ளாழ்ழீன் என்ற சொற்களை வைத்துக் கொண்டு சண்டையிட்டு மாய்ந்து போகின்றார்கள். திருக்குர்ஆனை உச்சரிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். ளாழ்ழீன் எவ்வாறு உச்சரிப்பது என்று விவாதிக்கின்றனர்.

திருக்குர்ஆனின் பக்கம் சிறிதும் கவனம் இல்லை. உளத்தூய்மையில் சிறிதும் கவனம் இல்லை. புதிய அறிவுகளைப் பெற்றிருப்பவர்களிடமோ இறையச்சம் இல்லை. தம்மை ஆலிம் என்று கருதுபவர்களிடமும் இறையச்சம் இல்லை. ஆனால் இறையச்சம் இல்லாமல் திருக்குர்ஆனின் அறிவைப் பெற முடியாது. பிறகு அதன் பொருளைப் பற்றி கூற வேண்டுமானால் முப்ராத்தே இமாம் ராகிப் எழுதுகிறார்கள்: ஹிக்மத் என்பதன் பொருள், இல்ம் மற்றும் அறிவின் உதவி கொண்டு உண்மையை சென்றடைதல்.

இறைவன் ஹிக்மத் உள்ளவன் என்பதன் பொருள், அவனது எல்லா விஷயங்களைப் பற்றிய ஞானத்தில் அதன் இறுதி எல்லை வரை பெற்றிருப்பதும் அவற்றை மிகச் சிறந்ததாக மாற்றி அதன் இருப்பை வெளியில் கொண்டு வருவதும் ஆகும். அதாவது, ஏதாவது ஒரு பொருள் குறித்த இறைவனின் மஃரிபத் (இறை ஞானம்) அதன் முழுமையான ஞானத்தை சுமந்தவாறு வெளிப்படும் படைப்பாக வருகிறது. அதில் எந்த குறைபாடும் இருப்பதில்லை.

மனிதன் ஹிக்மத் உள்ளவன் என்று கூறினால், இறைவனால் உருவாக்கப்பட்டுள்ள அப்பொருட்களைப் பற்றிய ஞானத்தைப் பெற்று அவற்றின் நன்மைக்காக பணி செய்பவன் என்று பொருளாகும். அல்லாஹ்வின் படைப்பினங்கள் குறித்த ஞானத்தைப் பெறுவது - உலகியல் அறிவைப் பெறுவது தடுக்கப்படவில்லை. அதனை எவ்வாறு பெறுவது என்று திருக்குர்ஆன் வழிகாட்டுகிறது. ஆனால், இறையச்சத்தை விட்டு விலகி, அதுதான் எல்லாம் என்று கருதுவது மார்க்கம் என்ற கட்டடத்தை காலியாக விட்டு வைப்பது ஹிக்மத் ஆகாது.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வைப் பற்றி அவன் ஹகீம் என்று கூறும்போது, மனிதனை ஹகீம் என்று கூறும்போது வருகின்ற பொருள்கள் வருவதில்லை. எனவேதான், இறைவன் தன்னைப் பற்றி கூறும்போது, அலைஸல்லாஹு பிஅஹ்கமில் ஹாக்கிமீன் - அல்லாஹ் ஹிக்மத் உள்ள அனைவரை விடவும் சிறந்த ஹிக்மத் உள்ளவனாவான் என்று கூறியுள்ளான். இதுவும் அந்த சொல்லிலிருந்து வெளிப்படுகிறது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பல்வேறு அகராதிகளின் அடிப்படையில் ஹிக்மத் மற்றும் ஹகீம் என்பதன் பொருளை எழுதுகிறார்கள். அல் ஹகீம் என்பதன் ஒரு பொருள், ஆலிம் என்பதாகும். இன்னொரு பொருள், ஹிக்மத் உள்ளவர். மற்றொரு பொருள், எல்லா வேலைகளையும் மிகச் சிறப்பாக செய்பவர். அவரது பணிகளை எவரும் குழப்ப இயலாது. ஹிக்மத் என்பதன் பொருள், நேர்மை, அறிவு (இல்ம்), நிபுணத்துவம் (ஹில்ம்) என்பதாகும்.

இன்னொரு பொருள், ஒவ்வொரு அறியாமையில் இருந்தும் தடுப்பது, உண்மைக்கு ஏற்ப அமைந்த சொல் என்றும் பொருள். சிலரின் கருத்தின்படி ஒவ்வொரு செயலையும் அதற்குரிய பொருத்தமான முறையில் பயன்படுத்துவதும் ஆகும். மேலும் அதன் பொருள் சீர்திருத்தத்திற்காக ஒருவரை ஒரு வேலையில் இருந்து தடுத்தல். இந்த காரணத்தினாலேயே விலங்குகளை கட்டுப்படுத்த கட்டப்படுகின்ற கயிறுக்கும் ஹகாம் என்று சொல்லப்படுகிறது.

ரூஹுல் மஹானி என்ற விளக்கவுரையில் லா இல்மலனா இல்லா மா அல்லம்தனா என்ற வசனத்தின் கீழ் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

***லா இல்மனா இல்லா மா அல்லம்தனா இன்னக்க அன்தல் ஹலீமுல் ஹகீம்*** என்ற வசனத்திற்கு அல்லாமா மஹ்மூது ஆலிஸி விளக்கம் அளித்தவாறு எழுதுகிறார்கள். இங்கு மலக்குகள் முழுமையான அறிவுக்குரியவன் என்று அல்லாஹ்வை சுட்டிக் காட்டுகின்றனர். பிறகு அவனுடைய ஹகீம் என்ற பண்பை ஒப்புக் கொள்கின்றனர். ஏனெனில், அவர்களுக்கு அதன் உண்மை நிலை தெளிவாக்கப்பட்டது.

அல் ஹிக்மத் என்பதன் ஒரு பொருள் தடுத்தல் ஆகும். விலங்கின் முகத்தின் போடப்படுகின்ற கயிறுக்கு ஹகாமா என்று அதனால்தான் அழைக்கப்படுகின்றது. அது விலங்குகளை அசுத்தங்களிலிருந்து தடுக்கிறது. மேலும் இல்முக்கும் ஹிக்மத் எனப்படும். அது ஒருவரை குழப்பி விடப்படுவதிலிருந்து தடுக்கிறது.

சிலரின் கருத்தின்படி ஹகீம் என்பவன் தனது எல்லா படைப்புகளையும் ஞானத்தின் அடிப்படையில் செய்துள்ளான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தமது விளக்கவுரையில் எழுதியுள்ளதை சுருக்கமாக விளக்குகிறேன். அதனைப் புரிவதற்கு இந்த வசனத்தையும் அதற்கு முந்தைய வசனத்தையும் நாம் பார்க்க வேண்டும். **லா இல்மலனா இல்லா மா அல்லம்தனா** -வுக்கு முந்தைய வசனம் **வஇஸ்கால ரப்புக லில்மலாயிகதி இன்னீ ஜாயிலுக ஃபில் அர்ழி கலீஃபா காலூ அத்தஜ்அலூ ஃபீஹா மன் யுஃப்ஸிது ஃபீஹா வயஸ்ஃபிஹுத்திமா வநஹ்னு நுஸப்பிஹு பிஹம்திக வநுகத்திஸுலக. கால இன்னீ அஃலமு மாலா தஃலமூன்.**

உனது இறைவன் மலக்குகளிடம் இவ்வாறு கூறியதை நினைத்துப் பார்ப்பீராக. பூமியில் நிச்சயமாக ஒரு கலீஃபாவை உருவாக்கப் போகின்றேன். (மலக்குகளாகிய) அவர்கள் கூறினர். குழப்பம் செய்து இரத்தம் சிந்துபவர்களையா படைக்கப் போகிறாய்? நாங்கள்தான் புகழுடன் உனது தூய்மையை எடுத்துரைக்கிறோம். உனது பரிசுத்தத் தன்மையை விளக்குகிறோம். அவன் கூறினான்: நிச்சயமாக நான் அறிவேன். நீங்கள் அறியமாட்டீர்கள். பிறகு அடுத்த வசனத்தில் வருகிறது. நாம் ஆதமுக்கு எல்லா பெயர்களையும் கற்பித்தோம். பிறகு அவற்றை மலக்குகளுக்கு முன்னால் வைத்துக் கூறினான். நீங்கள் உண்மையாளர்கள் எனில் இவற்றின் பெயர்களைக் கூறுங்கள். அதற்கு மலக்குகள் கூறினர். சுப்ஹானக்க லா இல்மலனா இல்லா மாஅல்லம்தான இன்னக்க அன்தல் ஹலீமுல் ஹகீம். நீ தூயவன். நீ எதனைக் குறித்து அறிவை வழங்கினாயோ அவை தவிர வேறு எவ்விஷயம் குறித்தும் எங்களுக்குத் தெரியாது. நீயே நிரந்தரமான அறிவு உள்ளவனும் மிகவும் ஞானமிக்கவனுமாவாய்.

அல் ஹகீமின் அகராதிப் பொருளை நாம் பார்த்து வருவதற்கு இணங்க அதன் பொருள், ஹிக்மத் உள்ளவன், அனைத்துப் பணிகளையும் நன்றாகச் செய்பவன், அதனை எவரும் பிறழச் செய்ய முடியாது ஆகியவையாகும். பிறகு அதன் இன்னொரு பொருள் இவ்வாறும் ஆகும். விஷயங்களின் உண்மை நிலை

அதன் சத்து வரை சென்றடைதல். இந்த எல்லா பொருட்களையும் அக்ரப் என்ற அகராதி நூல் கூறுகிறது.

எவ்வாறிருப்பினும் இந்த வசனத்திலிருந்தும் நான் படித்துக் காட்டிய இதற்கு முந்தைய வசனத்தின் மொழியாக்கத்திலிருந்தும் அங்கு நடைபெற்ற விஷயங்களை நீங்கள் ஓரளவு கணித்திருக்க முடியும். மலக்குகள் கூறினர். நீ எங்களுக்கு எவ்வளவு கற்பித்திருந்தாயோ அவ்வளவே எங்களுக்கு அறிவு உண்டு. அதற்கு முன்னால் அவர்கள் கூறினர். ஆதமை ஏன் நீ படைக்க வேண்டும். குழப்பத்தை உண்டாக்குவதற்காகவா?

அல்லாஹ் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு முன் எடுத்து வைத்ததும் அவர்களின் பதில், நீ எவ்வளவு கற்பித்தாயோ அந்த அளவே எங்களுக்கு அறிவு இருந்தது என்பதாகும். நாங்கள் உனது அறிவில் உள்ள அனைத்தையும் சூழ்ந்தறிந்துவிட ஒருபோதும் முடியாது. ஏனெனில் நீ நன்கு அறிந்தவனாகவும் இருக்கின்றாய். ஞானமிக்கவனாகவும் இருக்கின்றாய். நாங்கள் வெளிப்படையான விஷயத்தை கவனத்தில் வைத்துக் கூறினோம். ஆதமின் காரணத்தினால் இரத்தம் சிந்துதல் குழப்பம் ஆகியவை ஏற்படுமே என்றோம்.

மலக்குகள் தம் அறிவுக்கேற்ப கூறியதிலும் தவறில்லை. பாருங்கள்! இன்று உலகில் குழப்பங்களும் இரத்தம் சிந்துதலும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இதனால் நஊதுபில்லாஹ். மலக்குகளுக்கு அல்லாஹ்வை விட அதிகம் அறிவு இருந்தது என்று பொருளல்ல. மாறாக, அல்லாஹ் மலக்குகளிடம் கூறினான்: நான் ஒரு கலீஃபாவை உருவாக்கவிருக்கிறேன். அவர்கள் குழப்பத்திற்கு காரணமாக இருக்கமாட்டார்கள். மலக்குகள் உடனே புரிந்து கொண்டனர். எனவே, அல்லாஹ்வே நிச்சயமாக நீ ஹலீமுல் ஹகீம் ஆவாய். நாங்கள் இப்போது புரிந்து கொண்டோம். ஆதமின் சந்ததிகளில் எவர் இரத்தம் சிந்துவாரோ குழப்பம் செய்வாரோ அதற்கு ஆதம் பொறுப்பாகமாட்டார். அக்குழப்பங்களுக்கு காரணம் வெளிப்புறத்திலிருந்து வரும் பகைமையும் உட்புற பலவீனமுமாகும். ஆனால் அல்லாஹ்வின் கலீஃபாக்கள் நற்செயல்களையே போதித்தனர். இவர் என்ன கூறுவது என்று வெளியிலிருந்து எதிரிகள் குழப்பத்தைப் பரப்பினர்.

மேலும் உட்புறத்தில் அவர் கூறுவதின்படி அமல் செய்யவில்லை. இதனால் அவர்களுள் சிலரிடம் பலஹீனம் அதிகரித்தது. குழப்பம் பரவிவிட்டது. எல்லா நபிமார்களின் உம்மத்துகளுமே இந்த பிரச்சனையை சந்திக்க நேர்ந்தது. ஆகவே அல்லாஹ் மலக்குகளிடம் இதனை தெரிவித்த போது மலக்குகள் புரிந்து கொண்டனர்.

ஆதமுடைய கிலாஃபத்தின் காரணத்தால் இரத்தம் சிந்துதலும் குழப்பமும் ஏற்படாது. ஆனால் குழப்பம் ஏற்படலாம்; ஏற்படும். அவ்வேளையில் அல்லாஹ்வின் உயர்பண்புகளை தம்மில் சுமந்துவரும் நல்லடியார்களின் தோற்றமும் ஏற்படும். அவர்கள் அல்லாஹ்வை வெளிப்படுத்திக் காட்டுபவராக இருப்பர். எனவே ஆதமுக்கு அல்லாஹ் அதற்கேற்ப இறைபண்பை அறிவித்து தந்தான். ஆதம் அதன்படி அமல்செய்து காட்டினர். இவ்வாறு இறைபண்புகளை முழுமையாக வெளிப்படுத்திக் காட்டுவது, நன்மை தீமைகளை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் கொண்டவர்களுக்கே அன்றி மற்றவர்களால் முடியாது. பிறகு இறையன்பில் மூழ்கியவாறு நன்மைகளை இறைநெருக்கம் பெறும் பொருட்டு பயன்படுத்துபவர் மலக்குகளிடம் இந்த ஆற்றல் இல்லை. அவர்களுக்கு கட்டளையிடப்பட்டதையே செய்ய முடியும். எனவே ஒரு கவிஞர் கூறினார்.

மனிதனாக ஆகியது மலக்காக இருப்பதைவிட சிறந்தது. முயற்சி அதிகமாக அவரிடம் வளர்ச்சியடைந்தால்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களில் இருந்து நாம் பார்த்து விட்டோம். அல்லாஹ்வுடைய போதனையை புரிவதற்கு நன்மையும் இறையச்சமும் நிபந்தனையாகும். இதனை செய்தால் மனிதன் தனக்குள் இறைப்பண்புகளை உருவாக்க முடியும். எல்லாரினும் அதிகமாக இறைபண்புகளை ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) தமக்குள் உருவாக்கி இன்ஸானே காமில் (முழு மனிதன்) என்று அழைக்கப்பட்டனர். மலக்குகள் ஆதமுடைய பிறப்பிலேயே இக்கருத்தை ஒப்புக் கொண்டனர். ஒவ்வொரு நபியின் தோற்றத்தின் போதும் இதனை ஒப்புக் கொள்கின்றனர். தமது அறிவு எல்லைக்குட்பட்டது என்றும் மனிதனுடைய அறிவு தங்களுடன் ஒப்பிடும்போது எல்லையற்றது என்றும் ஏற்றுக்கொள்கின்றனர். இதிலிருந்து அல்லாஹ் அல் அலீம் (மிக நன்றாக அறிபவன்) அல்ஹகீம் (நுண்ணறிவுமிக்கவன்) என்று ஒப்புக்கொண்டனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) இதனை தொடர்ந்து இன்னொரு நுட்பமான கருத்தையும் விளக்கியுள்ளார்கள்:**

உலக படைப்பின் நோக்கத்தையும் அதன் ஞானத்தையும் எடுத்துச் சொல்வதுதான் ஆதமுடைய சம்பவத்தை விளக்கியதன் நோக்கமாகும்.

ஒவ்வொரு காலத்திலும் இறைவெளிப்பாடு இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே வெளிப்படுகிறது. எம்மக்கள் நபிமார்களை ஆட்சேபிக்கின்றனரோ அவர்கள் அல்லாஹ் ஏன் தனது படைப்பின் நோக்கத்தை முழுமை செய்கிறான் என்று ஆட்சேபனை செய்கின்றனர். இக்காலத்தில் இவ்வாறு ஆட்சேபனை செய்பவர்கள் முஸ்லிம்களிலும் இருக்கின்றனர். அதுவும் இந்த வசனத்தை எல்லாம் படிக்கவும் செய்கின்றனர். ஆனால் புரிவதில்லை. தாம் சரியாகத்தான் கூறுகின்றோம் என்று கருதிக்கொள்கின்றனர்.

ஒவ்வொரு காலத்திலும் நன்மையைப் பரப்ப அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களை அனுப்புகிறான். மக்கள் அதை மறுத்தே வந்துள்ளனர் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்நோக்கத்தை நிறைவேற்ற வந்துள்ளார்கள் என்பதனையும் மக்கள் மறுப்பதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது? எவர்கள் நபிமார்களின் மீது ஆட்சேபனை செய்கிறார்களோ அவர்கள் அதன் மூலமாக மனிதப்படைப்பின் நோக்கத்தை இறைவன் முழுமைப்படுத்துவது குறித்து ஆட்சேபனை செய்பவர்களாவர். ஆகவே சிந்திக்கின்ற மக்களுக்கு இது சிந்திக்க வேண்டிய இடம் ஆகும்.

**பிறகு இன்னொரு கருத்தை அன்னார் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ) விளக்கியுள்ளார்கள்:**

மலக்குகள், ***லா இல்மலனா இல்லா மா அல்லம்தனா*** (நீ எமக்கு கற்பித்ததை தவிர வேறு எதுவும் எங்களுக்கு தெரியாது) என்று கூறியதற்கு அதுமட்டுமல்ல பொருள். நீ கற்று தந்தது தான் எங்களுக்குத் தெரியும். வேறு எதுவும் தெரியாது என்பது மட்டுமின்றி ஆழ்ந்து நோக்கினால் மலக்குகள், மனித அறிவு வளர்வது போன்று எங்கள் அறிவு வளர்ச்சியடைவதில்லை என்று ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்பதாகும். மேலும் மனிதனுக்கு அறிவு வளர்ச்சி பெறுவதற்கான ஆற்றலை இறைவன் அவனிடம் வைத்துள்ளான்.

எங்களுக்குள் நீ வைத்திருக்கும் அளவுக்கே ஆற்றல்கள் உள்ளன. அதில் வளர்ச்சியின் அம்சம் இல்லை என்பதை மலக்குகள் ஒப்புக் கொண்டுள்ளனர். அந்த அறிவை வைத்துக்கொண்டு மனித அறிவால் புரிய முடிகிற விஷயங்களை எங்களால் சென்றடைய முடியாது. எனவே மனிதப்படைப்பில் ஒரு ஞானம் உள்ளது என்று நாங்கள் புரிந்து கொண்டோம் என்று மலக்குகள் கூறினர். மனிதப் பொறுப்பில் என்னென்ன பணிகள் உள்ளனவோ அவற்றை எம்மால் செய்ய முடியாது. சிலர் தீமையை பரப்புகின்றனர் எனில் அம்மனிதரால் இறைவனின் நோக்கததையே ரத்து செய்து விட முடியாது. இவ்வளவு அதிக வேலைகளுடன் அவர்கள் தஸ்பீஹ் தஹ்மீது செய்கிறார்கள் எனில் அவர்கள் மலக்குகளை விட மேன்மையை பெற்று விடுகின்றனர்.

அல் ஹிக்மா என்பது உண்மையான இறைஞானம், ஷரியத் சட்டம் ஆகும். அதன்மூலம் உயிர்கள் முழுமைபெறுகின்றன.அல்ஹகிம்என்பதுஹிக்மத்மற்றும் சீர்திருத்தத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பணியாற்றி மிக உயரிய ஞானம் மூலம் மிக உயர்ந்த காரியங்களை செய்யக்கூடிய சான்றோருக்கு சொல்லப்படும். எல்லாவற்றிலும் மிக உயர்ந்தது இறை இருப்பாகும். அவனன்றி எவரும் எந்த ஞானத்தையும் அறியமாட்டார். ஆகவே அல்லாஹ் ஹகீம் ஆவான். எனவே அவன் மிக உயர்ந்த செயல்களை மிக உயர்ந்த ஞானத்தின் மூலம் அறிந்தவனாவான். ஏனெனில் மிகவும் உயர்வும் கண்ணியமும் மிக்க இல்ம் என்பது நிரந்தரமானது. அதன் அழிவை கற்பனை கூட செய்ய முடியாது. அவனது இல்மில் இருந்து மறைந்தது அல்லது அணுவளவேனும் மறைந்துபோக சாத்தியமானது எதுவும் இல்லை. இந்த ஒரு சக்தி என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. ஆம்! எவராவது ஒருவர் ஒரு படைப்பின் நுட்பமான ஞானத்தை கொண்டுள்ளவராக இருந்து, மிக நல்லமுறையில் ஒன்றை உருவாக்குகிறார் எனில் அவர் ஹகிம் என்று அழைக்கப்படுகிறார். இதிலும் முழுமை பெற்றவன் என்ற சிறப்பு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. ஏனெனில் முழுக்க முழுக்க ஹகீமாக இருப்பவன் அவன் ஒருவன்தான். ஒருவர் எல்லா பொருட்களின் ஞானங்களையும் தெரிந்து கொண்டு அதே வேளையில் இறைவனைப்பற்றிய ஞானம் இல்லாதவராக இருப்பார் எனில் அவர் ஹகீம் ஆக அழைக்கப்பட தகுதியற்றவராவார். ஏனெனில் ஞானங்களின் மிக உயரிய பகுதியாகிய இறைஞானம் அவரிடம் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்லூது (அலை) கூறியிருந்தார்கள்:**

உலக பொருட்கள் மிகப்பெரிய முன்னேற்றங்களை அடைந்துவிட்டன. ஆனால் அல்லாஹ்வின் பக்கம் செல்வதற்கான வழி அவர்களுக்கு அடைக்கபட்டுவிட்டது. எனவே அவர்கள் ஹிக்மத்தை விட்டு விலகியவர்கள் ஆவர். உலகியல் அறிவின் ஒளி அவர்களிடம் இருக்கின்ற நிலையில் கூட அவர்கள் ஹகிம் என்று அழைக்கப்பட முடியாது.

பிறகு கூறுகிறார்கள். ஹிக்மத் என்பது எல்லா அறிவுகளைவிடவும் சிறப்பு வாய்ந்த அறிவு ஆகும். அறிவின் கம்பீரம் அதை பெற்றிருப்பவரிடம் அவருக்கு அதை வழங்கியவரின் சிறப்பிற்கேற்ப காணப்படுகிறது. அல்லாஹ்விடமிருந்து ஞானத்தை(இர்ஃபான்)ப் பெற்றவரோ அவரும் ஹகீம் ஆவார். அம்மனிதர் சம்பிரதாயமான செயல்களில் பலவீனமானவராக காணப்பட்டாலும் அவரிடம் சிறந்த நாவன்மை இல்லாவிடினும், வெளிப்படையாக அவரது விளக்கங்கள் அழுத்தமானதாக இல்லாமல் இருப்பினும், அல்லாஹ்வின் ஹிக்மத்திலிருந்து பெறப்பட்ட அந்த அடியானின் ஹிக்மத் அந்த அடியான் அல்லாஹ்விடமிருந்து பெற்ற ஞானத்திற்கு ஏற்ப அமைந்திருக்கும். அதாவது அவருக்கு கிடைத்த ஹிக்மத்தும் அல்லாஹ்விடமிருந்து பெற்றதற்கு ஏற்ப மிகப் பரந்ததாகவே இருக்கும். அல்லாஹ்வுக்கு தன்னைப் பற்றி எவ்வளவு தெரியுமோ அந்த அளவுக்கு அடியானுக்கு கண்டிப்பாக அல்லாஹ்வைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாது. அடியான் அல்லாஹ்வுடைய இயல்பு பற்றி எந்த அளவுக்கு அறிவைப் பெற்றிருப்பாரோ அதற்கும் அல்லாஹ் தன்னைப் பற்றி எவ்வளவு அறிவைப் பெற்றிருப்பானோ அதற்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அதே அளவு ஒரு மனிதனுக்கு உள்ள ஹிக்மத்துக்கும் அல்லாஹ்வுடைய ஹிக்மத்துக்கும் இடையில் வித்தியாசம் உண்டு.

அல்லாஹ்வுடைய ஹிக்மத்துக்கும், மனிதனுக்கு கிடைக்கப்பெற்ற அறிவுக்கும் இடையில் இவ்வளவு வித்தியாசம் இருப்பினும், அடியானுக்கு கிடைத்த அந்த அறிவும், ஞானமும் அதன் சிறப்பிலும், உயர்விலும் அளவிற்கரியதாகும்.

ஒருவருக்கு ஹிக்மத் வழங்கப்பட்டால் அளவற்ற செல்வம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. போதனை என்பது அறிவுள்ளவருக்கு மட்டுமே பலன் தரக்கூடியதாகும்.

அந்த வசனத்தின் விளக்கத்தைத் தான் நான் படித்தேன். மேலும் கூறுகிறார்கள். ஆம்! ஒரு விஷயம் உண்மையாகும்! எவருக்கு அல்லாஹ்வுடைய மஃரிபத் கிடைத்து விடுகிறதோ அவரது சொற்கள் அது கிடைக்காத மற்றவரை விட்டும் தனித்து விளங்குகிறது. அவர்களின் வார்த்தைகள் சுருக்கமாகவும் அழகுவாய்ந்ததாகவும் விளங்குகின்றன. தற்காலிக உலகியல் சார்ந்த விஷயங்களை விட இறுதி முடிவுக்கு பயன்தரக்கூடிய விஷயங்களை அவர்களின் சொற்கள் தாங்கி நிற்கின்றன. அவை இறைவனிடமிருந்து கிடைத்த மஃரிபத்தினால் விஷயங்களை தெளிவாக்கக்கூடியதாக இருப்பதால் அவர்களுடைய வார்த்தைகளும் பெரும்பாலும் மக்கள் ஹிக்மத் என்று அழைக்கின்றனர். இவ்வகை வார்த்தைகளை பயன்படுத்துபவர்களை ஹகீம் என்றழைக்கின்றனர்.

ஹஸ்ரத் செய்யதுல் அன்பியா (ஸல்) அவர்களின் தூய போதனை இது தொடர்பாக இவ்வாறு வருகிறது.

***ர அஸீஸுல் ஹிக்மத்தி மஃகா ஃபத்துல்லாஹி*** - அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமே உண்மையான ஹிக்மத் ஆகும். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களின் பார்வையில் அல் ஹகீம் என்பவர் குற்றவாளிகளை பழிவாங்குவதில் ஹிக்மத்தை (நுண்ணறிவை) கைவிடாதவர் ஆவார்.

**அதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:**

அஸீஸ் என்பவன் தனது காரியத்தில் ஆற்றல் உள்ளவன். அவனுக்கு கட்டுப்படாதவருக்கு தண்டனை வழங்குவதிலிருந்து அவனை எதுவும் தடுத்து விட முடியாது. அதே வேளையில் அவன் ஹகீமாகவும் இருக்கிறான். அவன் தண்டனை வழங்கும் போது நுண்ணறிவை பயன்படுத்துவதை விட்டு விடுவதில்லை.

**அடுத்து இன்னொரு வசனத்தையும் விளக்குகிறார்கள்:**

***வஇஸ்கால இப்ராஹீமு ரப்பி அர்னி கைஃபதுஹ்யில் மவ்தா.... வ அஃலமு அன்னல்லாஹ அஸீஸுல் ஹகீம்*** - என் இறைவா! நீ எவ்வாறு இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறாய் என்று எனக்கு காட்டுவாயாக என இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது இறைவனிடம் கேட்டதை சிந்தித்துப் பார்ப்பீராக. அதற்கு என்ன! நீர்

ஒப்புக் கொள்ளவில்லையா என்று அல்லாஹ் கேட்டான். ஏனில்லை? எனது உள்ளம் திருப்தி அடைவதற்காக கேட்டேன் என்று இப்ராஹீம் (அலை) அவர்கள் பதில் கூறினார்.

அவன் கூறினான்: நீர் நான்கு பறவைகளைப் பிடித்து, அவற்றை நன்றாக பழக்கி அவற்றின் ஒவ்வொன்றையும் ஒரு மலையில் விட்டு விடும். பிறகு அவற்றை அழைப்பீராக. அவை விரைந்து உம்மை நோக்கி வரும். அல்லாஹ் மிகைத்தவனும் ஞானமுள்ளவனுமாவான் என்று அறிந்து கொள்ளுங்கள்.

இங்கு ஹகீம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அவன் தனது ஒவ்வொரு செயலிலும் முதிர்ந்த ஞானத்தைக் கொண்டு செயல்படுபவன். அவனது செயல்களின் அடிப்படை அனுதினமும் செயல்பட்டு வரும் காரணிகளை மட்டும் சார்ந்ததல்ல. அவன் அசாதாரண அடையாளங்களை செய்து காட்ட இயலாதவனும் அல்ல. ஆனால் அவனது செயல்களில் எண்ணற்ற ஹிக்மத்துகளும் சீர்திருத்த நோக்கமும் பொதிந்துள்ளன. அடையாளங்களை அல்லாஹ்வால் காட்ட முடியும். மனித அறிவு சென்றடையவும் இயலாத எல்லை வரை போய்விடக் கூடிய அடையாளங்களை காட்டும் சக்தி வாய்ந்தவன். இந்த வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் அடையாளங்களை கேட்பது பற்றி வருகிறது. அதற்கு இறைவன் அளித்த பதில் வாசித்துக் காட்டப்பட்டது.

திருக்குர்ஆன் விளக்கவுரையாளர்கள் இதன் வெளிப்படையான பொருளையே இதன்மீது திணிக்கின்றனர். சிலர் வினோதமான விளக்கமெல்லாம் இந்த வசனத்துக்கு தருகின்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இதற்கு விளக்கம் தந்துள்ளார்கள். அதனை சுருக்கமாக கூறுகிறேன். அது இந்த வசனத்தின் உண்மை நிலையை வெளிச்சமாக்குகிறது.

இதில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஒரு துஆ செய்கிறார்கள். இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் பணி என் மீது சுமத்தப்பட்டுள்ளதே அது எப்படி நடக்கும்? அதாவது ஆன்மீக மரணம் அடைந்தவர்களை உயிர்ப்பிப்பது எவ்வாறு நடைபெறப் போகிறது? எனது சமுதாயம் எவ்வாறு உருவாகப் போகிறது? என்று நீயே எனக்கு காட்டு. நான் கிழவன். பணியோ மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. என்னால் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

அல்லாஹ் கூறினான்: நான்கு பறவைகளை எடுத்து அவற்றைப் பழக்கி மலைகளின் மீது விட்டு விடு. அழைக்கும் போது அவை உம்மை நோக்கி வரும். இதற்கு விளக்கமாக குறிப்பிடுகிறார்கள். அந்த வசனத்தின் பொருள், நீர் உமது சந்ததிகளுக்கு மிகச் சிறந்த தர்பிய்யத் வழங்குவீராக. உமது குரலுக்கு பதில் கொடுத்தவாறு மார்க்கத்தை முழுமைபடுத்தும் பணியை நிறைவு செய்யும்.

அந்த ஆன்மீக பறைவகளாவன: ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள், ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்கள். அந்த இரண்டு பறவைகளுக்கும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நேரடியாக பயிற்றுவித்தார்கள். மற்ற இரு பறவைகள் பயிற்றுவிக்கப்பட்ட அப்பறவைகள் மூலம் பயிற்சி பெற்றன. மலைகளில் வைக்கப்படுவதன் பொருள் தகுதிகளை உயர்த்துபவனின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நான்கு பறவைகளை தனித்தனியாக மலைகளில் விடுவதற்கு இன்னொரு பொருள்: மார்க்கத்தை முழுமைப்படுத்தும் பணி நான்கு வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெறும்.

ஏனெனில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த துஆவையும் செய்திருந்தார்கள். நான் எனது சந்ததிகள் தொடர்பாகவும் அடையாளத்தை பார்க்க விரும்புகிறேன். அதாவது பின்னால் வருபவர்களிடமிருந்தும் இவ்வடையாளம் வெளிப்பட வேண்டும். அவர்களும் இறந்தவர்களை உயிர்ப்பிக்க வேண்டும். அப்போது அல்லாஹ் கூறினான். உனது சமுதாயம் நான்கு முறை மரணமடையும். நானும் அவற்றை நான்கு முறை உயிர்ப்பிப்பேன். இவ்வகையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் காலத்தில் முதல் முறையாக குரல் எழுப்பப்பட்டது. அதுவும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் குரலே ஆகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மூலம் இரண்டாவது முறை குரல் எழுந்தது. பிறகு ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலம் அக்குரல் எழுந்தது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மூலமாக அக்குரல் எழுந்தது. ஆக முதலாவது பறவை மூஸாவின் சமுதாயம். இரண்டாவது பறவை கிறிஸ்தவ சமுதாயம். மூன்றாவது பறவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயம். அந்த சமுதாயத்தின் மீது அன்னார் கம்பீரமான தோற்றம் வெளிப்பட்டது. நான்காவது பறவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மென்மையான தோற்றமாகிய அஹ்மதிய்யா ஜமாஅத் ஆகும். இந்த ஜமாஅத் மூலம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்தது. அவரது காலத்திற்கு அண்மையிலும்,

தூரத்திலுமானகாலங்களின்காட்சியைஹஸ்ரத்இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் காட்டினான். இதுவே அல்லாஹ்வின் அஸீஸ் (மிகைத்தவன்) ஹகீம் (நுண்ணறிவு, ஞானம் உள்ளவன்) என்ற பண்பின் வெளிப்பாடு ஆகும்.

இந்த உயிர்ப்பித்தல் நம்மீது ஒரு பொறுப்பையும் சுமத்துகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப எந்த மரித்தவருக்கு உயிர் தருபவர் இக்காலத்தில் தோன்றவிருந்தாரோ அவரது போதனை நிரந்தரமாக நிலைத்து நிற்பதற்கு அது ஹிக்மத் நிறைந்ததாக இருப்பது அவசியமாக இருந்தது. அதனை நெருங்கியிருப்பது நமக்கு அவசியமாகி விட்டது. அப்போதுதான் ஜமாஅத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் இறந்தவர் உயிர்பெறும் காட்சியை காட்டுபவராகவும், பார்ப்பவராகவும் ஆக முடியும். எதுவரை நாம் தக்வாவின் மீது நிலைத்திருப்போமோ அதுவரை இக்காட்சியை நாம் காண்போம்.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ஒரு உதாரணத்தை எடுத்து வைக்கின்றார்கள்:**

***அஃப கைரில்லாஹி அப்தகி ஹகமா*** (6:15) - ஹகம் என்ற சொல் தனது பொருளுக்கேற்ப ஞானம் மிக்க பரந்த கருத்தை உள்ளடக்கி உள்ளது. ஹகம் என்பவர் ஈடிணையில்லாத ஹாகிம் ஆவார். அது குறித்த சிறப்பான ஞானம் உள்ளவர். எனவே, ஹகம் என்ற சொல் நேர்மையானவருக்கு மட்டுமே கூறப்படும். மேலும் யாருக்கு மீண்டும் மீண்டும் தீர்ப்பளிக்க வாய்ப்பு கிடைக்குமோ அவருக்கு ஹகம் என்று பெயர்.

இந்த வசனத்தில் விளக்கப்பட்டுள்ளது. இறைவன் எனது ஹகம் ஆவான். அவனைத் தவிர வேறொன்றை நான் ஏன் ஹகம் ஆக்க வேண்டும்? வேறு ஒருவரிடம் தீர்ப்பிற்காக நான் ஏன் செல்ல வேண்டும்? அல்லது வேறு ஒருவரை தீர்ப்பளிக்குமாறு நான் ஏன் அழைக்க வேண்டும்? இறைவன் ஒரு தீர்ப்பளித்து விட்டான் எனில் அவனே அனைவரிலும் சிறந்த தீர்ப்பு வழங்குபவன் ஆவான். மார்க்கத்தின் எதிரிகள் எவ்வளவு கூச்சல் வேண்டுமாயினும் போடட்டும். நாம் தீர்ப்பளிக்கிறோம் என்று கூறட்டும். அவர்களுக்கு எமது பதில் இதுதான். மேலும் ஒரு மூஃமினின் பதில் இவ்வாறுதான் இருக்க வேண்டும்.

***அஃப கைரில்லாஹி அப்தகி ஹகமா*** - அல்லாஹ்வைத் தவிர வேறொரு தீர்ப்பளிப்பவரை நான் தேடுவேனா? எனக்கு மற்றவரிடம் எந்தத் தேவையும் இல்லையே? அல்லாஹ்வே ஹகீமும் ஹகமும் (ஞானமுள்ளவனும், தீர்ப்பளிப்பவனும்) ஆவான் என்ற நிச்சய உறுதியால் நான் நிறைந்துள்ளேன். அவன் எனக்கு எத்தகைய ஞானம் நிறைந்த போதனையின் பக்கம் வழிகாட்டினானோ எத்தகைய தீர்க்கப்பட்ட அடையாளத்தைக் காட்டினானோ அத்தகைய ஒன்றை வைத்துக் கொண்டு வேறொன்றின் பக்கம் செல்ல வேண்டிய அவசியமே எனக்கு இல்லை.

இந்த பெயர் தாங்கி தான்தோன்றி ஆலிம்களின், பெரிய மனிதர்களின் எழுத்துக்களை எடுத்துக் கொண்டு வருவது, எனக்கு மாற்றமானது. அல்லாஹ்வின் தீர்ப்பு என்னோடு உள்ளது. எனவே, மற்றவற்றை நான் பொருட்படுத்தப் போவதில்லை. அவர்கள் எவ்வளவு முடியுமோ கூச்சல் இடட்டும்.

உங்கள் உலக நீதிபதிகளுக்கு மக்களின் ஆதரவு தேவை. இவர்களின் நீதிமன்றம், சட்டமன்றங்கள், ஆட்சிகள் எல்லாம் ஒரு முடிவெடுக்கும்போது கூச்சலிடுபவர்களின், சில நேரத்தில் விஷமிகளின் பலத்தையும் கவனித்தே தீர்ப்பு வழங்குகின்றன. ஆனால், எங்கள் இறைவன் மிகைத்தவனும் ஆவான். ஹகீமும் ஆவான். அவன் எடுக்கிற முடிவு நமது உலகம் மற்றும் மறுமை இரண்டிலும் நன்மை பயக்கும் முடிவாக இருக்கின்றது. எனவே, அத்தகைய இறைவனைத் தவிர வேறு எந்த நீதிபதியின் தேவையும் எனக்கில்லை. இன்று நாம் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். இன்று நாம் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் நிறைவேறி இருப்பதைக் கண்டு ஒரு உறுதியில் நிலைநிற்கிறோம். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களே வரவிருப்பதாக முன்னறிவிக்கப்பட்ட அதே மஹ்தி மஸீஹ் ஆவார்.

இறை வேதம் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களை இறந்தவர் என்று கூறி வரக்கூடிய மஸீஹையும் பற்றி அறிவிக்கிறது. இறைவனின் வேதம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்தே மஸீஹ் மஹ்தி வருவார் என்று அறிவிக்கிறது. பிறகு இந்த நீதிமன்றங்கள், சட்டமன்றங்கள், ஆட்சிகளுக்கு என்ன சிறப்பு வந்து விட்டது? இறைத் தீர்ப்பிற்கு எதிரில் அவற்றின் தீர்ப்பை நாம் ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? இறைவனோ அஃகமுல் ஹாக்கிமீன் ஆவான். அவனது தீர்ப்பை மறுப்பதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? எந்தத் தீர்ப்பை அஸீஸும் ஹகீமுமாகிய அந்த இறைவன் வழங்குவானோ அந்தத் தீர்ப்பை மறுப்பவர்களே வெற்றியை விட்டம் தடுக்கப்படுவார்கள். நாம் எப்போதும் வெற்றியை நோக்கி முன்னேறிக்

கொண்டே செல்வோம். எனவே, பாகிஸ்தானின் சட்டமன்றமாகட்டும். அல்லது வேறு எந்த நாட்டின் சட்டமன்றம் ஆகட்டும். நாம் அவர்களின் முடிவை ஒரு அணு அளவும் பொருட்படுத்தப்போவதில்லை. ஏனெனில் அந்த முடிவுகள் தக்வாவில் இருந்து விலகியதும் அறியாமையில் மூழ்கியதும் ஆகும்.

அல்லாஹ் மட்டும்தான் எப்போதும் தீர்ப்பு வழங்கி வருபவன். அவனே பெரிய நீதிபதி ஆவான். அவன் ஒரு தீர்ப்பு எழுதியுள்ளான். அவனது தீர்ப்பிற்கு ஏற்ப நாம் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தில் நிலைநிற்கிறோம். இன்ஷா அல்லாஹ் எமது இறுதி மூச்சு வரை அதிலேயே நிலைத்து நிற்போம்.

அல்லாஹ் நம் அனைவரையும் தக்வாவில் நிலைநின்றவாறு ஹகீமாகிய அந்த இறைவனின் ஹகம் என்ற பண்பையும் நடைமுறைப்படுத்தும் பாக்கியம் பெற்றவர்களாக்குவானாக! எப்போதும் நாம் ஹிக்மத்துடன் செயல்படுவோமாக. எப்போதும் இறை கட்டளைகளை உண்மையான முறையில் தக்வாவுடன் செயல்படுபவர்களாவோமாக. இதனை தொடர்ந்து இன்னொன்றையும் கூற விரும்பிகிறேன். மவ்லானா தோஸ்த் முஹம்மது ஷாஹித் சாஹிப் அவர்கள் MTA -ல் ஒரு நிகழ்ச்சி தருகின்றார்கள். 74 ஆம் வருட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் நிலைமைகளை விளக்குகின்றார்கள். மாஷா அல்லாஹ். மிகவும் சிறந்த ஒரு விளக்கம் தரப்பட்டு வருகிறது. எதிரிகளுக்கு அப்பொழுதும் அவற்றிற்கு பதில் எதுவும் இருந்ததில்லை. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்களுக்கு அன்றும் பதில் இருந்ததில்லை. இன்றும் பதில் தர இயலாது. இன்ஷா அல்லாஹ். அஹ்மத்திய்யத் மட்டுமே நேர்வழியில் சென்றவாறு அல்லாஹ்வின் அனைத்து பண்புகளையும் அதனை பெற்றிருப்பவர்கள் மீது வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். உலகில் பரப்ப வேண்டும்.

************


*KUTHBA*

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

*KALIFATHUL MASIH V*

***ON 07.12.07 AT LONDON***

***TRANSLATED BY : MAULVI M.NIZAMUDEEN***

***PUBLISHED BY :*** **MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD**

***Telefax : 0462 – 2352456***